**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாள் திங்கட் கிழமை**
**அசல் வழக்கு எண் – 30/2015**
**CNR No:TNAL050000422015**

தனவேல், வயது 39, த/பெ.ரத்தினம், நடுத்தெரு,
சூரியமணல் கிராமம், உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம். – வாதி

/எதிர்/

1) குருசாமி (இறந்தார்), வயது 65, த/பெ.பரட்டையன், நடுத்தெரு,
சூரியமணல் கிராமம், உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம். அவரின் பிரதிநிதியாக பவர் ஏஜெண்ட்
கொளஞ்சி, க/பெ. செல்வமணி, மேலத்தெரு,
கண்டியங்கொல்லை கிராமம், இலையூர் மதுரா,
உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.
(Amended as per order in I.A.1055/16, Order dated
carried out as per order in I.A.918/2018, dated 14.08.2019 )

2) சாரதம், வயது 60, க/பெ.லேட் குருசாமி, நடுத்தெரு,
சூரியமணல் கிராமம், உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.
(Amended as per in I.A.No.5/2023, dated 27.11.2023 ) – பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 20.01.2015 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 20.01.2015 |
| வியாஜ்ஜிய மூலம் | : | 21.05.2014, 25.05.2014, 15.01.2015, 19.01.2015 |
| வழக்கின் மொத்த பொறுமானம் | : | Rs.1000/– |
| செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | : | Rs.75.50/– |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | : | Rs.76/– |
| நீதிமன்ற கட்டணத்திற்கான சட்டப்பிரிவு | : | 27(c) TNCF Act |

தாவா சொத்தில் வாதியின் நீண்ட நெருடிய அனுபவத்தை பிரதிவாதியோ அவரின் ஆட்களோ, முகவர்களோ அவர்களின் கீழ் உரிமை கொண்டாடுபவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யாவண்ணம் தாவா ABCD இடத்தில் அத்துமீறி பிரவேசிக்காமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத்தொகையை வாதிக்கு பிரதிவாதி கொடுக்கவும், மற்றும் இவ்வழக்கின்

தன்மைக்கேற்ப சமூகம் கோர்ட்டார் அவர்கள் தம்யுக்தமாய் கருதும் இதர பரிகாரங்களை வழங்கியும் ஆணை பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 26.02.2024 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.உத்திராபதி அவர்கள் முன்னிலையாகியும், 1 வது பிரதிவாதி வக்காலத்து தாக்கல் செய்திருந்த நிலையில் முன்னிலையாகாமலும், 2 வது பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்பாணை</u>**

1) வாதி தரப்பு சாட்சி 1 அழைத்தும் ஆஜரில்லை.
2) ஆவணங்களை குறியீடு செய்வதற்காக போதிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டது.
3) இந்நிலையில் வாதி தரப்பு சாட்சி 1 தனது தரப்பு ஆவணங்களை குறியீடு செய்வதற்கு முன்வரவில்லை.
4) இவ்வழக்கு நீண்ட நாட்களாக நிலுவையில் இருக்கும் வழக்குகளின் கீழ் வருகிறது.
5) எனவே, நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2024–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**<u>சொத்து விபரம்</u>**

அரியலூர் பதிவு மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் சப்.டி., சூரியமணல் கிராமம் பழைய பட்டா எண் 1776–1400 க்கு புதிய கூட்டு பட்டா எண் 664 க்கு பழைய சர்வே எண் 346–12 க்கு புதிய சர்வே எண் 346–33 ல் 0.5.88 ல் 3 ல் 2 பாகம் வாதிக்கு சொந்தமானதில் மாதிரி வரைபடத்தில் காட்டியுள்ள இடத்தில் ABCD பகுதியில் தோராயமாக சுமார் 15 அடி அகலமும், 27.5 மீட்டர் நீளமும் உள்ள காலி மனைக்கு நான்கெல்லை. வாதி வீடு மனைக்கு (வ) பிரதிவாதி வீடு மனை இடத்திற்கு (தெ) சுந்தரேசன் தோட்டத்திற்கு (மே) செங்குந்தபுரம் டு சூரியமணல் தார் சாலைக்கு (கி) இந்த நான்கெல்லைக்கு உட்பட்டது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ், M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

---

கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.30/2015
தீர்ப்பாணை
நாள்: 26.02.2024

---